விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

VIJEAY Complex
www.vijeaycomplex.com

உங்கள் அனைத்து மங்கல நிகழ்வுகளையும்
கொண்டாடி மகிழ்ந்திட எம்மைத்
தொடர்பு கொள்ளுங்கள்.
0033687713427
021 221 2899/077 723 0104/077 449 6386
No.199, Chundikuli - Columbuthurai Road, Jaffna.
(9006)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 25 சனிக்கிழமை (11.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

## 93 மேலதிக வாக்குகளால்
# ராஜபக்ஷ அரசின் 'பட்ஜெட்' நிறைவேற்றம்
## ஆதரவாக 157 வாக்குகள்; எதிராக 64 வாக்குகள்

(கொழும்பு)

*2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் 93 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப் பட்டன.*

(15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் பலி

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.


நேற்று மாலை 15

## கொரோனா 18 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் பெண்கள் 9 பேர் உட்பட மேலும் 18 பேர் கொரோனாவுக்கு பலி யாகியுள்ளதாக அறி 15


### யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தை
## சுற்றியுள்ள பகுதிகளை அழகுபடுத்தும் பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

"தூய கரம் தூய நகரம்" துரித அபிவிருத்தித் திட்டத் தின் அடுத்த கட்டமாக 15

# அவசர சிகிச்சை பிரிவில் இலங்கை
## எதிர்க்கட்சி உறுப்பினர் எரான் சபையில் சாடல்



*(கொழும்பு) இந்த நாட்டை மீட்டெடுக்க முடியாது. அவசர சிகிச்சைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது.*

*இதற்கு ராஜபக்ஷவினரின் பொதுஜன முன்னணி அர சாங்கமே காரணம் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப் பினர் எரான் விக்ரமரத்ன சபையில் குற்றம் சுமத்தி னார்.*

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஒமிக்ரோன் பரவியிருக்கலாம்
### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் ஒமிக்ரோன் பிறழ்வு எந்தளவிற்கு பரவியுள்ளது என் பதை உறுதியாகக் கூறமுடியாது.

அதேபோன்று அதனால் ஏற் படக்கூடிய பாதிப்புகளும் எவ் வாறு அமையும் என்பதையும் கணிப்பிட முடியாது என்று பிரதி சுகாதார 15

# கடன் இல்லாத நாட்டையே அடுத்த அரசிடம் ஒப்படைப்போம்
## சபையில் நிதி அமைச்சர் பசில்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வழங்க இருக்கும் அனைத்து டொலர் களையும் அடுத்த வருடத்துக் குள் வழங்குவோம். அதற்கான திட்டங்களை நாங்களே மேற் கொண்டிருக்கின்றோம்.

அத்துடன் கடன் இல்லாத நாட்டை ஏற்படுத்துவதே எமது இலக்கு. கடன் இல்லாத நாட் டையே நாங்கள் அடுத்துவரும் அரசாங்கத்துக்கு ஒப்படைப்போம் என நிதி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 15

## நல்லூரடியிலும் எரிவாயு அடுப்பு
### வெடித்துச் சிதறியது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செல்வா வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்த எரிவாயு அடுப்பு நேற்று அதி காலை வெடித்து சிதறியுள்ளது.

குறித்த வீட்டுப் பெண் இரவு உணவு சமைத்து விட்டு அடுப்பினை 15

## ஆனைக்கோட்டையில் மோ.சைக்கிள் விபத்து
### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடி யில் இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் கோவில் அர்ச்சகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை சம்பந்தர் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த இரத்தினசபா பதிக் குருக்கள் கேதீஸ்வரக் குருக்கள் 15.

### 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு
## வடக்கில் திங்கள் முதல் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படும்

(கொழும்பு)

கோவிட்-19 தடுப்பூசி வழங் கல் திட்டத்தின் கீழ் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் 18 வய திற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக் கும் தொழிலாளர்கள் மற்றும் நோய் பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியினருக்கும் (தொழிற் சாலைகள் மற்றும் பணியிடங் களில் பணிபுரிவோர், சுகாதாரத்துறை சாராத 15

## பண்டிகைக் கொத்தணி உருவாகும் அபாயம்
### சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கோவிட் பரவல் நிலைமை தற்போது ஓர ளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றமையால், அதனைத் தொடர்ந்தும் பேணும் வகையில் எதிர் வரும் பண்டிகை காலங்களில் சுகாதார வழிகாட்டு தல்களை முறையாக பின்பற்றுமாறு சுகா தார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு காணி விற்பனைக்கு**

ஊரெழு கணேச பாடசாலையின் பின்புறம் 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (4, 4 பரப்பு)

தொடர்பு

**077 147 1000**

(8984)


# வடமராட்சியில் இருவருக்கு தொற்று

(கரணவாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பெண்கள் பாடசாலை மாணவி ஒருவருக்கும் உடற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து 3ஆசிரியர்களும் இரு மாணவிகள் உட்பட 7 பேர் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரவெட்டி கோட்டத்தில் இயங்கும் பெண்கள் பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அவருடன் தொடுகையை மேற்கொண்டு முதலுதவி வழங்கிய ஆசிரியர்கள் இருவரும் இரு மாணவிகளும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் கரவெட்டி கோட்டத்தில் இயங்கும் ஆண்கள் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த இன்னுமொரு உடற்கல்வி ஆசிரியரும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

(ம-03,60)


# மணிவிழா



Congrats! வாழ்த்து



**திருமதி சாந்தனாதேவி திரவியம்**

இலங்கை ஆசிரியர் சேவை தரம் I

**சேவைப் பதிவுகள்**

கிளி / கோணாவில் ம.வி
01.09.1992 - 01.03.2003

கிளி / திருவையாறு ம.வி
02.03.2003 - 17.03.2010

கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
18.03.2010 - 31.12.2018

யா / ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை
01.01.2019 - 11.12.2021

அல்லும் பகலும் சேவையில் அயராதுழைத்த ஆசிரியை அவர்கள் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை
சுன்னாகம்

(9011)



# வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் Jasta Fresh Juice bar இற்கு வேலை ஆட்கள் தேவை.

**இருபாலாரும் விரும்பத்தக்கது.**
**பழக விரும்புபவர்களும் இணையலாம்.**

(C-3219)

**077 137 1617**



# பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

அவோன் தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக கடமை புரிவதற்கு ஆண் உத்தியோகத்தர்கள் தேவை. பணிபுரிவதற்கு ஆர்வமுள்ளவர்கள் எமது நிறுவனத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் பங்குகொண்டு உங்கள் வேலையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

- நேர்முகத் தேர்விற்கு சமுகமளிக்கும் சகலரும் கிராம அலுவலரின் நற்சான்றுப் பத்திரம் (மூலப்பிரதி)
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் பத்திரம்
- தேசிய அடையாள அட்டை (நகல் பிரதி)
- பாடசாலை விடுகைப் பத்திரம்
- கடவுச்சீட்டு அளவு புகைப்படம் இரண்டு

○ **தகைமைகள்**
- உயரம் - 5' 4"
- மார்பு - 32"

○ **25 வயதுக்கு மேற்பட்டவர்கள் சமுகமளிக்கவும்.**

நேர்முகத் தேர்வு நடைபெறும் முகவரி

இடம் :- Avon International Holdings (Pvt) Ltd
YMCA 2 ஆம் மாடி,
இல. 107A, 2/1 கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகில்)

காலம் :- 11 ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை

நேரம் :- 9.00am - 4.30pm வரை நேரில் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு :
**077 435 5658, 021 226 4843**
(முகவரி தெளிவூட்டலுக்கு மட்டும்)

(C-3220)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# மரண அறிவித்தல்



## சின்னையா செகராசசிங்கம்

வதிரி அடைப்பைப் பிறப்பிடமாகவும் உதயப்பெருமாள் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செகராசசிங்கம் அவர்கள் நேற்று (10.12.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகாமியம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பறுவதம் அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சிவபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற குணசிங்கம், ரவிச்சந்திரா (கனடா), ஜெயச்சந்திரா, சிவச்சந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராதேவி, மங்கை, காலஞ்சென்ற தவராசா மற்றும் சிவராசா, எலிசன், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தவமலர் மற்றும் செல்வமலர், ரவிச்சந்திரன், காலஞ்சென்ற சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு.திருமதி செந்தூரன்-அஜந்தினி, அரவிந்தன்-சுமித்திரா, அசோக்-அபிராமி, செழியன்-கோகிலவாணி, சுஜீவன்-சுகன்யா, மேனுஜன்-பிரியங்கா, அமிர்தன்-பவித்திரா மற்றும் சேந்தன், துஷிக்கா, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் சாதனா, சாகித்தியா, கீர்த்திகா, ஆதித்தியா, அனுஸ்கா, ஆதவன், ஹாஷனா, கோவர்த்தனன், வகினாளினி ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.12.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-3218)

வதிரி 021 226 3505, 077 170 2505
076 541 2631

தகவல் : குடும்பத்தினர்



# அழைப்பிதழ்



***மகாகவி பாரதியின் சிலை திறப்புவிழா***

**இடம்** : வட்டுக்கோட்டை யாழ்/கல்லூரி அருகிலுள்ள
குக் வீதி, 1ஆம் ஒழுங்கை ( 11.12.2021 ) காலை 10.00 மணிக்கு

**தலைமை** : பேராசிரியர் **பொன். பாலசுந்தரம்பிள்ளை** அவர்கள்
( முன்னாள் துணைவேந்தர் )

வடபுலத்து சிற்பக்கலைஞர் திரு. **மாதவராசா சிறீசாந்தன்** அவர்களால்
நிர்மாணிக்கப்பட்ட இந்த உருவச்சிலை

**கௌரவ அதிதிகள் த. நடனேந்திரன்** (ச.நீ) ( வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் )
கௌரவ **துரைராசா சுஜிந்தன்** (ச.நீ) (பிரதேச சபை உறுப்பினர்)
கௌரவ **சிற்றம்பலம் சிறீஜீவா** (ச.நீ) (பிரதேச சபை உறுப்பினர்)
ஆகியோரின் முன்னிலையில்

பூஜைக்குரிய **வி.பாலகுமாரக்குருக்கள் ஐயா** அவர்கள் ( சாவகச்சேரி )
சிவத்திரு **மறவன்புலவு சச்சிதானந்தம் ஐயா** அவர்கள்
**வண. மீஹாசந்துர ஸ்ரீ விமலதேரர்** ( ஸ்ரீநாக விகாரை யாழ்ப்பாணம் )
**வண. அருட் கலாநிதி T.S சொலமன்**
( தென்னிந்திய திருச்சபை பேராதீனம் )
**வண. ராஜா கனகரத்தினம்** (சர்வமதப் பேரவை)
ஆகியோரின் அருள் ஆசியுடன்

கலாநிதி கந்தையா சிவராஜா
கலாநிதி M.P **நடராஜா**
ஆகியோரின் முதன்மையுடன்

மாண்புமிகு சிறீமான் **ராகேஷ் நட்ராஜ்** (இந்திய துணைத்தூதுவர்)
அவர்களின் வாழ்த்துதலுடன் இந்தச் சிலை திறந்து வைக்கப்படுகின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்புடன்
**கலாநிதி சிதம்பரமோகன்**
(உங்கள் பணியில்)

(9014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியில்லாத நாட்டில் நீதிமன்றம் எதற்கு?

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் போராட்டம்



(வவுனியா)



(யாழ்ப்பாணம்)



(முல்லைத்தீவு)

**(யாழ்ப்பாணம்)**

**சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று தமிழர் தாயகப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**



(மன்னார்)

நீதியில்லாத நாட்டில் நீதிமன்றம் எதற்கு? சர்வதேச விசாரணை வேண்டும். வலிந்து காணமால் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், எங்கே எங்கே எம் உறவுகள் எங்கே போன்ற கோஷங்களை எழுப்பியவாறும் பதாகைகளை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியாவில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்ட்டவர்களின் உறவுகளின் பிரதிநிதிகள் மதத்தலைவர்கள், பொது அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். போராட்ட நிறைவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் மகஜர் கையளிக்கப்பட்டது.(நி-5-18-33-104-299-285-281)

## யாழ். நோக்கி வந்த பேருந்து தடம் புரண்டு ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் சொகுசு பேருந்து விபத்துக்குள்ளாகியாது.

விபத்தின் போது பேருந்து தடம் புரண்டு அருகில் உள்ள வயலுக்குள் பாய்ந்துள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். மதவாச்சிக்கும் இகிரிகொல்லாவக்கும் இடைப்பட்ட வளைவில் 145 ஆவது மைல் கல்லிற்கு அருகில் உள்ள வளைவில் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துள்ளாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் ரம்பேவ மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## திருமணத்திற்கு சென்ற வான் விபத்துக்குள்ளானதில் இருவர் பலி

(அநுராதபுரம்)

நொச்சியாகமவில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த வான் ஒன்று அநுராதபுரத்திலிருந்து நொச்சியாகம நோக்கி பயணித்த பேருந்துடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் வானில் பயணித்த 6 பேர் படுகாயமடைந்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

திருமண நிகழ்வொன்றில் மணமகளை அலங்கரிப்பதற்காக வானில் சிலர் பயணித்ததில் மணப்பெண்ணுக்கு அலங்காரம் செய்ய சென்ற பெண்ணும் சாரதியும் உயிரிழந்துள்ளனர். (நி-5)

## தடுப்பூசி அட்டை கட்டாயமாக்கப்படும்

### -ஜனாதிபதி தெரிவிப்பு-

(கொழும்பு)

பொது இடங்களுக்கு பிரவேசிப்பதற்கு தடுப்பூசி அட்டைகள் கட்டாயமாக்கப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். மேலும் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை செலுத்தி முடிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (நி-5)

## பல்கலை மாணவர்களை பதிவு செய்யும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டின் வெட்டுப்புள்ளிகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களில் மாணவர்களை பதிவு செய்யும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை வரை மாணவர்களை பதிவு செய்யும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பதிவு நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவுறுத்தப்படவிருந்தன.

எனினும், மாணவர்களால் முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கைகளை கருத்திற் கொண்டு கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-5)

## உள்ளூராட்சி தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பம்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையின் பொருத்தமான சீர்திருத்தங்களை இனங்கண்டு தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டத்தில் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா இதனைக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் 2022 மார்ச் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை தேர்தல்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தயாராகி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்த லுக்கு குறைந்தது 4 மாதங்களுக்கு முன்னதாகவே தயார்படுத்துவது இன்றியமையாதது என தேசிய தேர்தல் ஆணைய த்தின் தலைவர் நிமால் புஞ்சி ஹேவா இதன் போது மேலும் வலியுறுத்தினார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலியின் ஒருநாள் தொடருக்கான கப்டன் பதவியும் பறிபோனது

## புதிய கப்டனாக ரோஹித் நியமனம்

இந்திய அணியின் ஒரு நாள் கப்டனாக ரோகித் சர்மாவை பிசிசிஜ நியமித்துள்ளது.

இந்திய அணியின் இருபது-20 கப்டன் பதவியில் இருந்து நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரோடு தான் ஓய்வு பெறுவதாக கோலி அறிவித்தார். இதை யடுத்து சமீபத்தில் நடைபெற்ற நியூசிலாந்து அணிக்கெதிரான இருபது-20 தொடரில் ரோகித் கப்டனாக நியமிக்கப்பட்டார்.

அதுமட்டுமின்றி இனி இந்திய அணிக்கான இருபது-20 ரோகித் தான் புதிய கப்டன் என்பதை பிசிசிஜ அறிவித்தது.


இந்நிலையில் தற்போது இந்திய அணியின் ஒருநாள் கப்டனாகவும் ரோகித் சர்மாவை பிசிசிஜ அறிவித்துள்ளது.

எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று கோலியின் ஒருநாள் கப்டன் பதவி பறிக்கப்பட்டுள்ளது. (4-6)



வடமாகாண விளையாட்டு விழா 2020 இன் ஓர் அங்க மான மாகாண மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் முதலிடம் பெற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளது. (படங்கள்- தவசீலன்)

# அதிவேக சதமடித்து டிராவிஸ் ஹெட் சாதனை



அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் அண்மையில் தொடங்கியது. இதில் 'டாஸ்' ஜெயித்து முதலில் பட் செய்த இங்கிலாந்து 50.1 ஓவர்களில் 147 ரன்னில் சுருண்டது. அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளை சாய்த்தார். அதன் பிறகு மழை பெய்ததால் முதல் நாள் ஆட்டம் அத்துடன் முடிவுக்கு வந்தது.

பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 195 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில், மிடில் வரிசையில் களம் கண்டு நிலைத்து நின்று ஆடிய டிராவிஸ் ஹெட் சிறப்பாக ஆடினார்.

ஒரு நாள் போட்டி போன்று அதிரடியாக விளையாடி ரன்களை சேகரித்த அவர் 85 பந்துகளில் தனது 3 ஆவது சதத்தை நிறைவு செய்தார். ஆஷஸ் வரலாற்றில் இது 3 ஆவது அதிவேக சதமாகும். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2466


| ஆரபி | ஆரிஷ் | அகரன் |
|---|---|---|

எல்லாத்துக்கும் பிடிச்சமாதிரி வாழனும்னா




அடுத்த ஜென்மத்தில் காசாத்தான் பிறக்கனும்

அலாரம் அடிச்சதும் எழும்புறதா இருந்தா அலாரம் வை



தேவையில்லாமல் அலாரம் வைச்சு என்னைய கடுப்பேத்தாத


அம்மா தானே அடிச்சாங்க இதுக்காக அழலாமா கண்ணா..



யோவ்வ்வ் உனக்கு அம்மாகிட்ட அடிவாங்கி பழகிபோச்சு. ஆனா எனக்கு வலிக்கிதுயா..

| சோபன் | ஹரி | அபி |
|---|---|---|

எத்தனை பொண்ணுங்க விட்டுட்டு போனாலும் கவலைபடக்கூடாது...



எடிசனுக்கு கூட ஆயிரம் தடவை முயற்சி பண்ணியும் கடைசியா கிடச்சது... பல்புதான்

நீ லீவ் குடுப்பனு நம்பி இருக்கிறோம்னு நினைச்சியா அதுக்கு அவசியமே இல்லை



இனிமே எங்களுக்கு ஒமிக்ரோன் போதும் அவன் பாத்துக்குவான் எங்கள

என்னடா பாத்திரம் கழுவிட்டு இருக்கிறாய்?



நானும் எவ்வளவு நேரம்தான் போனையும் ரிவியையும் பாத்துட்டு இருக்கிறது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

11.12.2021
கார்த்திகை 25, சனிக்கிழமை
அட்டமி பின்னிரவு 12.59 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.08 மணிவரை
சுபநேரம்- 3.19-4.49 மணிவரை
இராகு காலம்- 9.19-10.49 மணிவரை
சந்திராஷ்டமம்- ஆயில்யம்
திருவெம்பாவை பூசை ஆரம்பம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள்.


மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.


கடகம்

மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடல் நலனில் கவனம் தேவை.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


கன்னி

எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உற்சாகமான நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, போசனசுகமுண்டு.


துலாம்

வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.


விருச்சிகம்

வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பகைப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.


மகரம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


கும்பம்

மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், கற்பனை மிகுதியான நாள், உடல் நலனில் கவனம் தேவை, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


மீனம்

தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி கூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

பனித்துளியை சுமப்பதால் மலரின் அழகு குறைந்துவிடுவதில்லை

# இரண்டு வாரங்களுக்கு தேவையான அந்நியச்செலாவணி மட்டுமே கையிருப்பில்

## மத்திய வங்கி அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**நாடு எதிர்நோக்கி இருக்கும் பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் கூட தாமதமாகியுள்ளதாக மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டப்ளியூ.ஏ.விஜேவர்தன தெரிவித்தார்.**

அத்துடன் நாட்டில் அந்நியச்செலாவணி கையிருப்பானது 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது எனவும் விஜேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். இந்த அந்நியச்செலாவணி கையிருப்பானது இரண்டு வாரங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய மாத்திரமே போதுமானது எனவும் இந்த நிலைமையின் கீழ் நாட்டின் வெளிநாட்டு சொத்துக்களின் கையிருப்பானது கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது எனவும்மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் தெரிவித்தார். (நி-5)

# உயர்நிலை கல்வி முறைமையில் சீர்திருத்தங்கள் அவசியம்

(கொழும்பு)

உயர்நிலை கல்வி முறைமையில் சீர்திருத்தங்கள் பல அவசியமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் கல்வி முறைமை தற்போதைய உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் இல்லை. இதனால் மூன்றாம் நிலைக் கல்வி முறைமையில் விசேட கவனம் செலுத்தி பல்வேறு மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். பல்கலைக்கழக மாணவர்கள் எந்த பட்டப்படிப்பைத் தொடர்ந்தாலும் அவர்கள் அனைவரும் குறைந்தது தகவல் தொழில் நுட்பத்திலேனும் ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியதோடு, தற்கால உலகை வெற்றிகொள்வதற்கு அவசியமான ஏனைய திறன்களையும் பெற்றிருக்க வேண்டுமென வலியுறுத்தினார். (நி-5)

# பால்மா தட்டுப்பாடு தீவிரமடையலாம்

## பால்மா இறக்குமதியாளர் சங்கம்

(கொழும்பு)


பால்மா இறக்குமதிக்கு தேவையான டொலரை நிதியமைச்சு பெற்று தரா விடின் எதிர்வரும் நாட்களில் பால்மா தட்டுப்பாடு தீவிரமடையும் என பால்மா இறக்குமதியாளர் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் டொலர் நெருக்கடி காரணமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை துறைமுகத்திலிருந்து விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

பால்மாவிற்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதை தொடர்ந்து பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டது. இறக்குமதியாளர்களின் தீர்மானத்திற்கமைய பால்மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை. தற்போதைய விலைதிகரிப்பு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடு செய்யும் வகையில் அமையவில்லை.

பால்மா இறக்குமதியின் போது அறவிடப்படும் வரியை இரத்து செய்யுமாறு நிதியமைச்சிடம் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு இதுவரையில் சாதகமான தீர்வு கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (நி-5)

# 5ஆம் ஆண்டு நினைவுகளில்..



அமரர்.நாகலிங்கம் புவனேந்திரன்

தோற்றம் 25.02.1950

மறைவு 07.12.2016

திதி: பூர்வபக்க அட்டமி

அன்பின் உருவமாய்
பண்பின் சிகரமாய் உயர்ந்து
ஆலமர விருட்சமாய் நிழல் தந்து
பாசமுடன் எமையெல்லாம் வளர்த்து
கூடியிருந்த நாட்கள் ஒவ்வொன்றும்
குதூகலமாய் இருந்து விட்டு
எமையெல்லாம் பரிதவிக்கவிட்டு
எங்கு சென்றீர் ஐந்தாண்டு
கடந்து சென்றதப்பா நீர் சென்று
ஆறுமோ எம் துயர்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(8971)

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.

மனைவி, மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 15 ஆம் திகதி முதல்

# நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேருந்து சேவை

(குப்பிழான்)

தனியார் பேருந்து சேவையின் மூன்று வகையான சேவைகள் (உள்ளூர் சேவைகள், வெளியூர் சேவைகள், கொழும்பிற்கான இரவு சேவைகள்) யாழ்.நீண்டதூரப் பேருந்து நிலையத்திலிருந்து எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். தனியாரின் உள்ளூர் சேவை பேருந்துகள் நெடுந்தூரப் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டுத் தற்போது இயங்கி வரும் இடங்களில் பத்து நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும். அதேபோல வெளியிடங்களிலிருந்து வரும் பிரயாணிகள் நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இறக்கப்படுவர்.

இ.போ.ச.பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் நீண்ட தூரத்திற்குப் பயணிக்கும் பெரிய பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதியின் ஊடாகச் சத்திரச்சந்தியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ்.வீதியூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்து வெளி மாவட்டங்களுக்கான பயணத்தினை மேற்கொள்ளும் என்பதுடன் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் பேருந்துகள் இப்பாதையையே பயன்படுத்த வேண்டும் என்பதுடன் இப்பாதை ஒழுங்குமுறையானது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இ.போ.ச.பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும் வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் நீண்ட தூரத்திற்குப் பயணிக்கும் பெரிய பேருந்துகள் ஆஸ்பத்திரி வீதி ஊடாக வேம்படிச் சந்திக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18-33)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2021ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதால் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி 60 வயதை பூர்த்தி செய்யும் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று நாளை 14 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4-5)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை08.30 மணி முதல் கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது. மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-18)



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 86 மாணவர்களுக்கு யாழ்.மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் உறுதி பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அருட்பணியாளர்கள், அருட் சகோதரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைநகர் பிரதேச செயலகமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்துகின்ற வழிபாட்டுத் தலங்களில் கடமை புரிவோருக்கான இலவச மருத்துவ முகாம் நாளை மறுதினம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 8 மணி தொடக்கம் காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெறவுள்ளது.

பங்குபற்றுவோர் தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருவதுடன் முதல் நாள் இரவு 10 மணிக்குப் பின்னர் உணவு உட்கொள்ளாமல் இருந்து, முகக் கவசம் அணிந்து வருகை தருமாறும் (கிளினிக் கொப்பி வைத்திருப்போர் அதையும் தம்முடன் எடுத்து வரவும்) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (4-5)

# தீவக அபிவிருத்தி தொடர்பில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(குப்பிழான்)

தீவக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.



வடக்கு மாகாண ஆளுநரின் தீவக கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் மற்றும் மக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் தீவக வீதி, உட்கட்டமைப்பு நடவடிக்கைகள், கல்வித் துறைசார், ஆளணிப் பற்றாக்குறை, படகுச்சேவை, மற்றும் பயணிகள் வீதிப் போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் சுகாதாரம், விவசாயம், சந்தைப்படுத்தல், கழிவகற்றல், மின்சாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள் ம.பிரதீபன், எஸ்.முரளிதரன் (காணி), மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், ஆகியோர் கலந்து கொண்டனர். (4-5-18)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹன்டர் குடைசாய்ந்தது



(கரணவாய்)

வடமராட்சியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்து விபத்திற்குள்ளானது.

குறித்த சம்பவம் நேற்று காலை வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் மறிக்க முற்பட்ட வேளை ஹன்டர் சாரதி வாகனத்தை வேகமாக செலுத்திய போது தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதி தலைகீழாக புரண்டு நெல் வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

மணல் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-60)

# மாதகலில் குண்டு மீட்பு



(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் - காந்திபுரம் பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்த வெடிகுண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த காணியின் உரிமையாளர் பயிர் செய்கை மேற்கொள்வதற்காக நிலத்தை பண்படுத்திய வேளை குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. நீதிமன்றத்தின் அனுமதியின் பின்னர் குறித்த குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

## சிவ ஆராதனை

(யாழ்ப்பாணம்)

"இடர் சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் அனைத்து துன்பங்களிலும் இருந்து விடுபட சிவ ஆராதனையே சிறந்த வழிபாடாகும்." எனும் தலைப்பில் நமசிவாய விகித ஜபம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் வீணாகான குருபீட ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் இடம்பெறவுள்ளது என வீணாகான குரு பீட குருமுதல்வர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் அறிவித்துள்ளார். (4-5)



பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த முதலாம் திகதி யா/கல்வியங்காடு இ.த.க பாடசாலை அதிபர் திருமதி பத்மஜா பாஸ்கரக் குருக்களால் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா

மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11 ம் நாள் ஞாயிற்றுக்கிழமை
(டிசெம்பர் 25 மற்றும் 26)

**இடம் - யாழ்ப்பாணம் இந்து கல்லூரி-சபாலிங்கம்அரங்கம்**

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென் தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெரு விழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக் கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்த திருவருள் கைகூடியுள்ளது.

**மார்கழிப் பெருவிழா முதலாம் நாள்**
**மார்கழித்திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை (டிசெம்பர் 25)**

**அப்பர் சுவாமிகள் அமர்வு**

**காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை**
**யாழ்ப்பாணம் இந்து கல்லூரி ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை**
**துவக்க உரை :** சிவத்திரு.திருவம்பலம் தென்னவன் (நிறுவுனர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடம்)
**தலைமை உரை:** பேராசிரியர். சிவத்திரு.சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா (துணைவேந்தர்-யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)
**திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்)**-சிவத்திரு.நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
**தொண்டு நெறி**-தமிழ் நாடு மதுரை சொ.சொ.மீசுந்தரம்ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தல்**- மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**சம்பந்தர் சுவாமிகள் அமர்வு**
**மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை**

**தலைமை உரை:** சிவத்திரு.நல்லையா விஜயசுந்தரம் (முதன்மை ஆசிரியர் வலம்புரி நாளிதழ்)
**திருமுறை விண்ணப்பம்** (சம்பந்தர் தேவாரம்) கலாநிதி.திருமதி.சுகன்யா அரவிந்தன் குழுவினர்
**மகன்மை நெறி** -தமிழ் நாடு மதுரை சொ.சொ.மீசுந்தரம் ஐயா
**அடியார் பெருமை** - ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு
**நன்றியுரை** - சிவத்திரு.அமிர்தலிங்கம் லதாங்கன் (பொதுச் செயலாளர்-சைவ மாணவர் சபை)

**மார்கழிப் பெருவிழா இரண்டாம் நாள்**
**மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 26)**

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு**

**காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை**
**யாழ்ப்பாணம் இந்து கல்லூரி - ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை**
**துவக்க உரை** - சிவத்திரு.ஜெயபாலன் தவேதன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)
**தலைமை உரை:** சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன் (செயலாளர்) கல்வி அமைச்சு, வடமாகாணம்)
**திருமுறை விண்ணப்பம்** (சுந்தரர் தேவாரம்) - சிவத்திரு.நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
**தோழமை நெறி** - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீசுந்தரம்ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தல்**- மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

**மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு**
**மதியம் 1.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை**

**தலைமை உரை:** சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன் (அரசாங்க அதிபர்-யாழ்.மாவட்டம்)
**திருமுறை விண்ணப்பம் (திருவாசகம்)**
**அன்புநெறி** - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீசுந்தரம்ஐயா
**கௌரவிப்பு நிகழ்வு- தொகுப்பு:** சிவத்திரு.தில்லையம்பலம் கௌரீசன் (பொருளாளர்) சைவ மாணவர் சபை)
**நன்றியுரை**-சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர்-சைவ மாணவர் சபை)
**திருமுறை விண்ணப்பம் இசைக் கலைஞர்கள்**

வயலின்- கேதீஸ்வரன் வேலதீபன்
புல்லாங்குழல் - சிவத்திரு.கமலநாதன்தேசிகன்
முகர்சிங் - சிவத்திரு.கந்தசாமி நந்தகுமார்

**நிகழ்ச்சித் தொகுப்பு:** சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமிசிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்கு பற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**கொக்குவில்.**
**021 221 2739 / 075 653 3111**

(C-3217)

சிவமயம் ஓம் நமசிவாய

# ஈழத்துச் சிதம்பரம்
## (காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில்)



**பலகால முடனுறைந்து பயின்று சிவ வழிபாட்டின்**
**நலமுணர்ந்து பற்றெல்லாஞ் சிவப்பற்றாய் நயந்து திண்ணத்**
**தலமுறையு மையனருட் டாண் மலர்க்கே பற்றாளார்**
**அலமரலும் நல்லுயிரை யாட் கொள்ள அரன்கடனே**
ஈழத்துச் சிதம்பர புராணம்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றிப் புகழ்பாடும் காரைநகர் திண்ணபுரம் சிவன்கோவில் ஒரு வித்தியாசமான அருள்மிகு கோயிலாக ஐயனார் கோவிலுடன் ஒன்றாக ஒரு கூரையின் கீழ் அருள் திருக்கோயிலாகும்.

16 ஆம் நூற்றாண்டளவில் குளக்கோட்டு மன்னனால் வியாவில் எனும் இடத்தில் ஐயனார் கோவில் அமைக்கப்பட்டு தமிழ்நாட்டின் உத்தரகோசமங்கை எனும் ஊரில் இருந்து சிவாச்சாரியார் அழைக்கப்பட்டு சிறப்பான பூசைகள் நடைபெற்ற அக்காலத்தில் ஈழத்தில் பிரசித்தி பெற்ற சிவ ஆலயங்களில் அருள்மிகு சிறந்த ஆலயமாகும்.

17 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டது.

18 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் இந்தியாவில் இருந்து சூலம் ஒன்றுடன் இங்கு வருகைதந்த ''ஆண்டிமுருகர்'' என்பவர் ஐயனார் அரச மரம் அருகில் இருப்பதாகத் "கனவில் தோன்றிய அருட்காட்சியுடன்" வந்தார். தற்போது சிவன் கோவில் தெற்கு வீதியில் பெரும் அரச மரத்தின் கீழ் சிறு குடில் அமைத்து தாம் கொணர்ந்த சூலத்தை அங்கு அமைத்து ஆன்மார்த்த வழிபாடு ஆற்றி வந்தார். அவ்வாறு ஐயனார் சிந்தையுடன் இருந்து வரும்போது அரச மரத்தின் அருகில் தென் கிழக்குப்பகுதியில் அருள் ஒளிக்கீற்றுக்காட்சி தரிசித்து மண் அகழ்ந்தபோது ஐயனார் விக்கிரகத்தைக் கண்டார். ஆனந்தக் கூத்தாடினார். மனதில் பக்தி சிரத்தையுடன் ஐயனார் விக்கிர கத்தை அரச மரத்தின் கீழ் வயிரவர் சூலயத்தின் அருகில் வைத்து ஆன்மார்த்த பூசை செய்து வந்து நாளடைவில் பரார்த்த பூசையாக மாறியது.

பரார்த்த பூசை ஆலயத்தில் நடந்த இடம் 400 பரப்பு விஸ்தீரணம் அடக்கமானது. இதன் உரிமையாளரான அம்பலவாணர் முருகருக்கு இங்கு நடக்கும் பூசை வழிபாட்டு அருளை அன்பர் ஒருவர் தெரியப்படுத்த அடுத்த நாள் பூசையில் கலந்து ஆண்டி முனிவரின் திருப்பார்வையால் ஆலய நில உரிமையாளர் முனிவர் வசமானார். ஆண்டி முனிவரின் அன்புக்கட்டளையை ஏற்று ஐயனாருக்கு ஓர் தனி ஆலயம் அமைத்தார்கள்.

அந்த ஐயனார் ஆலயத்தில் ஆனி உத்தர தீர்த்தத்தினமாகக் கொண்டு மஹோற்சவமும் மார்கழித் திருவாதிரைத் தீர்த்த பிரமோற்சவமும் இறை அருளுடன் செய்து வரலானார்.

திருவாசகத்தில் ஈடுபாடுடைய "திருவாசகத்தேன் பிரியரான" அம்பலவி முருகர் தனது கைப்பட ஏட்டில் எழுதி மார்கழித் திருவாதிரை நாளில் காரைநகரில் முதல் முதல் ஐயனார் ஆலயத்தில் முற்றோதல் செய்து வந்தார். ஐயனார் வழிபாட்டில் தில்லை நடராசரின் தரிசனத்தைப் பெற்றார். அம்பலவி முருகர் தரிசித்த சிதம்பரக் கூத்தன் காட்சிதனை உலக மக்கள் காண வேணும் என ஐயனாரைப் பிரார்த்தித்தார். அந்த அருள் பேறே இன்றும் காரைநகரில் உலக மக்களால் போற்றித் துதிக்கும் ஆனந்தக் கூத்தனை அற்புதக் கூத்தனை பொற்தில்லைக் கூத்தனை தரிசிக்கும் அரிய வாய்ப்பினை காரைநகர் மக்களும் எல்லோரும் தரிசிக்க முக்தி தரும் பேரருள் பேறே காரைநகர் "ஈழத்துச்சிதம்பரம்" தரிசனம் காணும் காரைநகர் சிவன் கோவில் ஆகும்.

மாணிக்கவாசகர் ஓதிய திருவாசகத்தேனும் கோவையும், தில்லைக்கூத்தன் திருக்கரங்களால் எழுதி உலக மக்களால் போற்றப்படும் திருவாதவூரருக்கு எம்பெருமாள் சூட்டிய நாமம் மாணிக்கவாகர் எனும் திருப்பெயரில் அன்னதான சபையும் மணிவாசகர் சபையும் சிறப்புத் தொண்டாற்றி வருவதும் அம்பலவாணர் முருகரின் சிறப்பு அம்சமாகும்.

**இன்று - 2021 ம் ஆண்டு திருவெம்பா ஆரம்பதினம் பத்துத்தினமும்**
**காலை மாலை ஓதுவோம் அமைதி பெறுவோம்**



**ஓம் நமச்சிவாய வாழ்க**
**ஓம் நாதன்தாள் வாழ்க**
**ஓம் இமைப்பொழுதும் என் நெஞ்சில்**
**நீங்காதவன் தாள் வாழ்க**
**ஓம் கோகழி ஆண்ட குருமனிதன் தான் தாள் வாழ்க**
**ஓம் ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க**
**ஓம் ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க**

**சிவ சிந்தனையுடன்**
**க.கு.க.சிவபாலன். (k.k.k)**

(C-3214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தடுப்பூசிகளை பதுக்கி வைப்பதை தவிருங்கள்

## உலக சுகாதார ஸ்தாபனம் செல்வந்த நாடுகளிடம் கோரிக்கை

(ஜெனீவா)

புதிய ஒமிக்ரோன் திரிபு பரவல் காரணமாக, செல்வந்த நாடுகள், கொவிட் தடுப்பூசிகளைப் பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரியுள்ளது.

ஒமிக்ரோன் திரிபு பரவல் காரணமாக, சில செல்வந்த நாடுகள், செயலூக்கி தடுப்பூசி ஏற்றலைத் துரிதப்படுத்துகின்றன.

பெருமளவான மக்களுக்கு இதுவரையில் தடுப்பூசி செலுத்தப்படாமல் உள்ளது. நாடுகளுக்கான விநியோகத்தில் தாக்கம் செலுத்தும் என உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய ஒமிக்ரோன் திரிபிலிருந்து பாதுகாப்பு பெற, மேலதிக கொவிட் தடுப்பூசி அவசியமா? என்பது இதுவரையில் தெளிவாகத் தெரியவில்லை.

எனவே, செல்வந்த நாடுகள் தடுப்பூசிகளைப் பதுக்கி வைப்பதைத் தவிர்க்குமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கோரியுள்ளது. (நி-5)

# மெக்சிக்கோவில் பாரிய விபத்து!


## * 49 குடியேற்ற வாசிகள் உயிரிழப்பு

## * 58 பேர் படுகாயம்

(மெக்சிக்கோ)

மத்திய அமெரிக்க குடியேற்றவாசிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களுடன் பயணித்த கனரக வாகனமொன்று தெற்கு மெக்சிக்கோவில் அமைந்துள்ள நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

இச் சம்பவத்தின் போது 49 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 58 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், சியாபஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் லூயிஸ் மானுவல் மோரேனோ தெரிவித்துள்ளார். (நி)



# புகைப்பழக்கம் அற்ற நாடாக மாறும் நியூஸிலாந்து

(வெலிங்டன்)

2025 ஆம் ஆண்டுக்குள் நாட்டை முழுவதுமாக புகைப்பிடிக்காத நாடாக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக புதிய திட்டங்களை நியூஸிலாந்து நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

அதன்படி 2008 ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்த எவரும் தங்கள் வாழ்நாளில் சிகரெட் அல்லது புகையிலை பொருட்களை வாங்க முடியாது.


அதே நேரத்தில் வயதானவர்களுக்கு கிடைக்கும் சிகரெட்டில் நிகோடின் அளவு குறைக்கப்படும்.

சிகரெட் விற்பனையில் ஈடுபடும் சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையும் கணிசமாகக் குறைக்கப்படலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான சட்டம் அடுத்த ஆண்டு இயக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சுகாதார அதிகாரிகளும் ஏனைய பிரச்சாரக் குழுக்களும் இந்த நடவடிக்கையினை வரவேற்றுள்ளன.

முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் புகையிலைத் தொழிலின் மீதான உலகின் கடுமையான ஒடுக்கு முறைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நியூசிலாந்தில் ஏற்கனவே சிகரெட்டுகளுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் புகையிலையற்ற நாட்டை உருவாக்கும் இலக்கை அடைய இன்னும் நடவடிக்கை தேவை என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. (நி-5)





இலங்கை கடற்படையின் 71 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடற்படையின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் கொழும்பு - காலிமுகத்திடல் கடற்பரப்பில் கடற்படைக்கு சொந்தமான 7 சிறப்பு கப்பல்கள் நங்கூரமிடப்பட்டு மக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கஜபாகு கப்பல் போர் காலத்தில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. தற்போது போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.


# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Provision of a Private Security Service for the University of Jaffna -2022/2023**

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be a calender year days subject to a performance evalution period of 90 days from the start date
3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.
   3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**
   3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/Corporation/University during the last 3 years for not less than **Rs. 25.0Million.**
4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **300 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **30th December2021**upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **2500.00**. The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 97000006000276** at any Branch of People's Bank.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. **on 03rd January 2022**. Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Two hundred and fifty thousand only (**Rs. 250,000.00**).
10. Pre-bid meeting will be held at **10.00 am on 28th December 2021**in the board room of the University of Jaffna, Thirunelvely.

**The Chairman/ Department Procurement Committee**
**University of Jaffna,**
**Thirunelveli,**
**Jaffna.**
**11.12.2021**

(C-3216)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியங்களை அழிக்காது நீதியை பெற்றுக் கொடுங்கள்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**அரசாங்கம் காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காது மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

காணாமல் போன உறவினர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட தீப்பந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகம் போர் பாதிப்பால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளஅத்தனை பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையான ஒரு அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

அரசாங்கம் காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையாக இருந்தால் பகிரங்கமாக அரசாங்கம் மன்னிப்பை கோர வேண்டும். அதற்கு அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு நிலைமைக்கு செல்வதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு ஒரு முழுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-5-299)



# 60 வயதிற்கு மேற்பட்டவர்களில் 3,776 பேர் தடுப்பூசி பெறவில்லை

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 3,776 பேர் இதுவரை தடுப்பூசி செலுத்திக்கொள்ளவில்லை என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தடுப்பூசி போடுபவர்களுடைய கணக்கெடுப்பு இடம்பெற்று வருகிறது. அதனடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்ட 3,776 பேர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை.

தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்கள் தங்களை ஓரளவு தொற்றிலிருந்து பாதுகாக்கக்கூடியதாக இருக்கும்.

பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் காணப்படும் மாவட்டமாக எமது மாவட்டம் உள்ளது.

இவ்வாறான தொற்றுக்களின் ஊடாகவும் எமது மாவட்டம் பாதிப்புக்குள்ளாகாத படி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்தார். (4-5-100)

# விபத்து; ஒருவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா, பஜார் வீதியில் முச்சக்கரவண்டி - மோட்டர் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து நேற்று இடம் பெற்றது. இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-250)

# டிப்பர் விபத்து தொடர்பில் கைதானவர்களுக்கு விளக்கமறியல்

(தருமபுரம்)

கிளிநொச்சியில் கடந்த 7 ஆம் திகதி பெண் ஒருவரை டிப்பரில் கடத்தி சென்றவேளை டிப்பர் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஆறு பேர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது டிப்பர் சாரதியை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் ஏனையவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-316)

# நோயாளர்களை பார்வையிட வருவோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## வவு. மருத்துவமனை பணிப்பாளர்

(குருமன்காடு)

நாட்டில் நிலவும் கொவிட் தொற்று காரணமாக அனைவரினதும் நலன் கருதி நோயாளர்களைப் பார்வையிட வருவோர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் க.ராகுலன் தெரிவித்தார்.

விடுதியிலிருந்து வழங்கப்படுகின்ற நோயாளர் பார்வையிடும் அட்டையினைக்கொண்டு ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே உள் நுழைய முடியும் என்பதுடன், நோயாளர்களை காலை 6 மணி-7 மணிவரையும், மதியம் 12 மணி தொடக்கம் 1 மணி வரையும், மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரையும் மாத்திரமே பார்வையிட அனுமதிக்க முடியும்என மேலும் தெரிவித்தார். (4-5-250)

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி




(தருமபுரம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினர் நேற்று கிளிநொச்சியில் விழிப் புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமாக பிறந்தவர்கள் எனும் தொனிப் பொருளில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு பேரணியில் பெண் குலத்தை மதித்து பெண்ணியம் காத்திடு, வேண்டாம் வேண்டாம் பாலியல் துஷ்பிரயோகம் வேண்டாம், பெண்கள் மீதான வன்முறைகளை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும், ஆண்,பெண் ஊதியபாகுபாடு வேண்டாம் என்று சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு தங்களின் விழிப்புணர்வை மேற்கொண்டனர். (4-5-316)

# யாழைச் சேர்ந்த குடும்பஸ்தர் மீது வவுனியாவில் தாக்குதல்

## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

(நெளுக்குளம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு வாகனம் ஒன்று கொள்வனவு செய்யும் நோக்கில் வந்த குடும்பஸ்தர் மீது வவுனியா பொலிஸ் நிலை யத்திற்கு அருகில் " மகேந்திரா வாகனத்தில் வந்த சிலர் மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தி விட்டு தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில் , கடந்த செவ்வாய்கிழமை யாழை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் வவுனியாவில் வாகனம் ஒன்று பார்வை யிடுவதற்காக சென்று,பார்வையிட்ட பின் யாழ்ப்பாணத்திற்கு திரும்புவதற்கு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பேருந்திற்கு காத்திருந்தபோது மகேந்திரா வாகனம் ஒன்றில் வந்திறங்கிய ஆறு பேர் கொண்ட குழுவினர் சரமாரியான தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியதோடு குறித்த நபரிடம் காணப்பட்ட தங்க நகைகளையும் அபகரித்துக் கொண்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக் கப்பட்ட நபர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் பதிவு செய்துள்ளார். (4-5-299)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட இணைய ஊடகவியலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சங்கத்தின் தலைவர் கனீஸியஸ் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக ந.ஜன கதீபன், செயலாளராக ப.கார்த்தீபன், பொருளாளராக சசிகரன், உப தலைவராக ப.சதீஸன், உப செயலாளராக பா.கதீஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-5-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிலோ அரிசியின் விலை 500 ரூபாய் வரை அதிகரிக்கலாம்

## இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 500 ரூபாயை விடவும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதென இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

முன்னதாக ஒரு டன் யூரியா 278 அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் இன்று ஒரு டன் யூரியாவின் விலை 1282 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அந்த விலையில் யூரியாவை கொண்டு வந்து விவசாயம் செய்தால் ஒரு கிலோ அரிசி 500 ரூபாயை தாண்டும் என அவர் தெரிவித்தார்.

இன்று இலங்கையில் 25 கிலோ யூரியா மூட்டை ஒன்று 9000 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## கல்வி, ஞானம் தரும் வைகாசி விசாகம்



உலகில் அதர்ம செயல்கள் தலை தூக்கி, தர்மம் தடுமாறும் போது நல்லவர்களை காப்பதற்காகவும், தீயவர்களை அழிப்பதற்காகவும் யுகங்கள் தோறும் அவதாரம் செய்வதாக பகவான் கிருஷ்ணன் கூறுகிறார். அவதாரம் என்ற வடமொழி சொல்லுக்கு கீழே இறங்கி வருதல் என்று பொருள்.

மக்களின் துன்பங்களை போக்க இறைவன் ஏதோ ஒரு உருவில் உலகில் அவதரிப்பதையே அவதாரம் என்பர். மகாவிஷ்ணுவின் தசாவதாரங்களில் இதுவரை நிகழ்ந்த ஒன்பது அவதாரங்களும் இதை உணர்த்துகின்றன.

சூரபத்மன் என்ற அசுரனிடம் இருந்து மக்களை காக்க சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியவர், முருகன். வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தன்று முருகப் பெருமான் அவதாரம் நிகழ்ந்ததாக புராணங்கள் கூறுகின்றன.

முன்னொரு காலத்தில் பத்மாசுரன் என்ற அரக்கன் சிவபெருமானை நோக்கி கடும் தவம் இருந்தான். அவனது தவத்தை கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அரக்கன் முன் தோன்றினார். மனமகிழ்ந்த பத்மாசுரன் சிவபெருமானிடம் சிவனுக்கு இணையான ஒருவரை தவிர வேறு யாராலும் அழிக்க முடியாத வரம் பெற்றான். பின்னர் வரத்தின் பலத்தால் யாரும் தன்னை வெல்ல முடியாது என்ற ஆணவத்தால் தேவர்களுக்கு பல கொடுமைகள் செய்தான். அவனது தொல்லைகளை தாங்க முடியாமல் துன்பப்பட்ட தேவர்கள் சிவனிடம் முறையிட சென்றனர்.

அப்போது சிவன் தவத்தில் இருந்தார். இதைப்பயன்படுத்தி கொண்ட தேவர்கள் தங்களை துன்புறுத்தும் அரக்கனை அழிக்க தங்கள் அம்சமாக ஒருவரை உருவாக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு பொறிகளை உருவாக்கி கங்கை நதியில் விட்டார். வைகாசி மாதத்து விசாக நட்சத்திரத்தில் முருகப்பெருமான் இவ்வுலக மக்கள் அனைவரின் உயர்விற்காக உதித்தார்.

'அருவமும் உருவமாகி அநாதியாய்ப்
பலவா யொன்றாய்ப்
பிரம்மமாய்நின்ற சோதிப்பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒரு தின முருகன் வந்தாங்
குதித்தனன் உலகமுய்ய'

என முருகனின் தோற்றம் பற்றி கந்தபுராணம் கூறுகிறது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## இராணுவத் தளபதி டில்லி பயணம்

(டில்லி)

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் இராணுவ இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியா சென்றுள்ளார்.

அதன்படி, அவர் தனது மனைவி மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட 11 பேருடன் நேற்று அதிகாலை டில்லிக்கு சென்றுள்ளார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி மலைப் பாதையில் கடந்த புதன்கிழமை வானில் பறந்துகொண்டிருந்த இராணுவ ஹெலிகொப்டர் திடீரென கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## குளவிக் கொட்டுக்கு இலக்கான ஐவர் மருத்துவமனையில்

(பதுளை)

பதுளை லுணுகலை ஆடாவத்தை தோட்டத்தில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருந்த 5 பெண் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஐந்து பெண்களும் லுணுகலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 320 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 600 | 600 | 600 |
| தக்காளி | 500 | 450 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 350 | 360 | 400 | 400 |
| கரட் | 250 | 360 | 360 | 400 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 300 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 120 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 550 | 800 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 200 | 240 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 550 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 320 | 360 | 360 | 440 |
| பீற்றூட் | 120 | 160 | 200 | 300 |
| கறிமிளகாய் | 500 | 700 | 800 | 600 |
| முருங்கைக்காய் | -- | 600 | - | 800 |
| போஞ்சி | 350 | 340 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | 260 | - | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | - | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 240 |
| வெங்காயப்பூ | -- | -- | - | -- |
| முள்ளங்கி | 160 | 140 | - | 280 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய லேபிள் சிலிண்டர்களிலும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவு

(கொழும்பு)

எரிவாயு நிறுவனங்களால் புதிய லேபிளின் கீழ் வெளியிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களிலும் வெடிப்புகள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில், இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

எரிவாயு வெடிப்புகளை விரைவில் நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ஏப்ரல் மாதத்திற்குள் நாட்டில் கடும் பஞ்சம்

## பேராசிரியர் மெத்திகா எச்சரிக்கை

(கொழும்பு)

**அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் இந்த நாட்டு மக்களுக்கு உண்பதற்கு உணவு கிடைக்காது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் மெத்திகா விதானகே எச்சரித்தார்.**

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த அவர், மகா பருவத்திற்கான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், தேவையான உரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், கரிம திரவ உரங்களை மட்டுமே இடுவதன் மூலம் நாட்டில் போதுமான அறுவடையை எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மகா பருவம் நாட்டில் மிக முக்கியமான மற்றும் அதிக உற்பத்தித்திறன் கொண்ட பருவம் எனவும், அந்தப் பருவத்தில் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாது எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

விவசாயத்துறையில் அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளை அரசாங்கம் அலட்சியப்படுத்துவதால் உணவுப் பற்றாக்குறை தவிர்க்க முடியாதது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# மாணவர்களிடையே கொவிட் தொற்று பெரிய அளவிலான அதிகரிப்பு அல்ல

## சுகாதார அமைச்சகம் தகவல்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சுமார் நான்கு மில்லியன் பாடசாலை மாணவர்களில் 400 முதல் 500 பேர் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ள சுகாதார அமைச்சகம், பாடசாலை மாணவர்களிடையே பெரிய அளவிலான கொவிட்-19 கொத்தணிகள் எதுவும் பதிவாகவில்லை என்று தெரிவித்துள்ளது.

அதிகரித்து வரும் நோய்த் தொற்றுகள், அவர்களின் வீட்டுச் சூழலில் இருந்தே பரவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே கொவிட்-19 நோய்த் தொற்றுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆனால் அது பெரிய அளவிலான அதிகரிப்பு அல்ல.


மேலும் கொவிட்-19 எதிர்காலத்தில் பாடசாலைகளிலும் பெரிய அளவில் பரவுவதற்கு இடமில்லை என்றும் சுகாதார வழிகாட்டுதல்கள் பாடசாலைகளில் முறையாக செயற்படுத்தப்படுகின்றன என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-5)

# பச்சை மிளகாய், கறி மிளகாய் விலைகள் உயர்வு

(கொழும்பு)

சந்தையில் மரக்கறி விலைகள் சிறிதளவு குறைந்துள்ள போதிலும் கறிமிளகாய் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றின் விலைகள் உயர்வாகவே காணப்படுவதாக விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார நிலையங்களில் நேற்று முன்தினம் ஒரு கிலோகிராம் கறிமிளகாய், பச்சை மிளகாய் ஆகியவற்றின் மொத்த விலை 780 ரூபாவாகவும், சில்லறை விலை 800 ரூபாவாகவும் இருந்தது.



ஏனைய காய்கறிகளில் போஞ்சியின் மொத்த விலை அனைத்து பொருளாதார மையங்களிலும் 400 ரூபாவுக்கு அதிகமாகவே காணப்பட்டது.

அத்துடன், கரட் 380 ரூபா முதல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உழைப்பை உபயோகமாக்குவோம்

உழைப்பு என்பது நம்மிடம் எப்போதும் இருக்கக் கூடிய மாபெரும் சொத்து. சேமித்து வைக்கப்பட்ட பணத்தைத் தவறாகச் செலவழிப்பது எவ்வளவு வீணோ, அவ்வளவு வீண் உழைப்பை வீணாக்குவதும்.

தேவையற்ற வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன் மூலம் பரபரப்பு அடையக் கூடாது. அவசரமும் பதற்றமும் பரபரப்பும் தவறில் முடியும். அதாவது , செய்து முடிக்கப்பட்ட பணியில் சுத்தமிராது. மேலும் இத்தகைய பரபரப்பு வீணான களைப்பை ஏற்படுத்துமே தவிர, வேலையைச் சரிவர செய்ய முடியாது.

உழைக்கும் போது இயந்திரம் போல் செயற்படாமல், செய்து கொண்டிருப்பதும் செய்யப் போவதும் சரிதானா என்ற கேள்வியை நமக்கு நாமே எழுப்பிக் கொள்ள வேண்டும். அத்தகைய உள்ளுணர்வு இருந்து கொண்டிருக்குமானால் நம் உழைப்பு வீணாகாது, செய்து முடித்த செயலில் வெடிகுண்டு வைத்து அடியோடு தகர்ப்பதைப் போன்ற தவறு ஒன்று இருந்தால் அதனால் என்ன பயன்?

எனவே,ஒவ்வொரு வகையான உழைப்பையும் சிந்தித்துச் சிறப்பாகச் செய்கிறோமா? என்பது மிக முக்கியம்.

மனம் குழப்பமடைந்திருக்கும் நிலையில் சிந்தித்துச் செய்ய வேண்டிய உழைப்பைத் தவிர்க்க வேண்டும். மெழுகுவர்த்தியின் இரண்டு முனைகளையும் பற்ற வைத்து ஒளி பெற முயல்வது புத்திசாலித்தனமான செயலல்ல. 'நான் கடுமையாக உழைக்கிறேன்' என்று சிலர் தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வார்கள்.

நன்கு உழைக்க வேண்டியது தான். ஆனால், அந்த உழைப்பே உடல் நலத்தைக் கெடுக்குமானால், அது உபயோகமற்ற உழைப்பு.

கடுமையான உழைப்பை விட, புத்திசாலித்தனமான உழைப்பே மேலானது.

மேலும், கடுமையான உழைப்பு திறமையின்மையை உருவாக்கிவிடும் என்பது மனவியல் வல்லுநர்களின் கருத்து.

விருப்பமும் ஈடுபாடும் அற்ற உழைப்பும் உபயோகமற்ற உழைப்பாகவே இருக்கும்.

கட்டாயத்தின் பேரிலும், மற்றவர்களுக்குப் பயந்து கொண்டு ஈடுபடும் உழைப்பும் வீணான ஒன்றே.

தேவைகள், சூழ்நிலைகள், உடல்நலம் ஆகியவற்றைக் கொண்டு நம்முடைய உழைப்பைப் பற்றி முடிவுக்கு வரவேண்டும்.

தேவையான மற்றும் உரிய நேரத்தில் வேலை முடிய வேண்டும்; ஆனால் , அதன் தரம் சற்றும் குறையக் கூடாது. அது தான் முறையான உழைப்பு.

திறமையாலும் தகுதியாலும் உயர்ந்து விட்டவர்கள் தங்கள் தன்மைகளுக்கேற்ற உழைப்பில் ஈடுபட வேண்டும். அத்தகையவர்கள் அற்பமான காரியங்களிலும் சொற்பமான செயல்களிலும் உழைப்பை வீணாக்கிக் கொண்டிருக்கக் கூடாது.

அதேபோல, அறிவிலும் ஆற்றலிலும் சற்றுக் குறைந்தவர்கள் தங்கள் திறமைக்கு இணையான உழைப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

தகுதிக்கு மீறிய உழைப்பு உபயோகமற்றதாக முடிவதோடு எதிர்பாராத நட்டங்களையும் ஏற்படுத்தக் கூடும்.

மேலும், நம்முடைய உழைப்பு, நமக்குச் செல்வத்தையோ, புகழையோ தரக் கூடியதாகவும், மற்றவர்களுக்குத் தரக்கூடியதாகவோ நமக்கேனும் மன நிறைவைத் தரக்கூடியதாகவோ அமைய வேண்டும்.

இத்தகைய அளவுகோலைக் கொண்டு நம்முடைய உழைப்பை நிர்ணயித்துக் கொண்டால், நம் உழைப்பு- மிக மிக உபயோகமான ஒன்றாக ஆகிவிடும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சாம்பல் நிற முயலும் குள்ள நரியும்

இது உண்மையிலேயே ஒரு பளிங்கு அரண்மனைதான்.

ராஜாக்களிடம்தான் இதுபோன்ற வீடு இருக்கும்.' குளிர்காலம் இருக்கும்வரை நரிக்கு ஏதும் சிக்கலில்லை.

இளவேனிற்காலம் வந்ததும்தான் தொடங்கியது பிரச்சினை. அப்போது கதிரவன் வெப்பமாகப் பிரகாசிக்கத் தொடங்கினான்.


குள்ளநரியின் அரண்மனை உருகித் தண்ணீராக ஓடியது. வீடு இல்லாமல் இனிமேல் என்ன செய்யும் அந்த நரி.

ஒருநாள் முயல் புல் மேய்வதற்காக வெளியே சென்றது. அந்த நேரம் பார்த்து நரி, முயலின் வீட்டிற்குள் நுழைந்தது.

முயல்,அங்கங்கே புல் மேய்ந்துகொண்டே மெதுவாக வீட்டிற்குத் திரும்பியது. அது தன் வீட்டுக் கதவைத் தள்ளியது. ஆனால் திறக்க முடியவில்லை.? அது மறுபடியும் கதவைத் தட்டத் தொடங்கியது.

'யார் அது?" குள்ள நரி கோபத்துடன் மிரட்டியது. 'நரியக்கா, நான் தான் சாம்பல் நிற முயல் வந்திருக்கிறேன். கதவைத் திறவுங்கள்."

'சாம்பல முயலாவது, சோம்பல் முயலாவது? யாராக இருந்தாலும் வெளியிலேயே கிட!?" குள்ள நரி சிடு



சிடுப்புடன் சொன்னது.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்த முயல் மறுபடியும் சொன்னது. 'நரியக்கா, உங்கள் கிண்டல் பேச்சைக் கொஞ்சம் நிறுத்துங்கள். என்னை உள்ளே விடுங்கள். நான் தூங்கவேண்டும்."

ஆனால் தந்திரமான குள்ள நரி உறுமியது.? 'நான் உன்னை உதைத்து நொறுக்குவேன், அடித்து விளாசுவேன். முயலே, அதன்பிறகு உன்னைப் பழந்துணிபோல் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்துவிடுவேன்!.

முயல் அழுதுகொண்டே துயரத்துடன் அலைந்து திரிந்தது. வழியில் அது ஒரு ஓநாயைப் பார்த்தது. 'முயலே, எதற்காக அழுதுகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டது ஓநாய். முயல் அழுது கொண்டே சொன்னது? 'என் நிலை உனக்கு வந்தால் நீயும் கூட இப்படித்தான் அழுவாய்.

எனக்கு மரப்பட்டைகளால் ஆன ஒரு வீடு இருந்தது. குள்ள நரிக்கு பனிக்கட்டியால் ஆன வீடு இருந்தது.? அந்த நரியின் வீடு சூரிய வெப்பத்தால் உருகிக் கரைந்து காணாமல் போய்விட்டது.

உடனே, நரி திருட்டுத்தனமாக என் வீட்டிற்குள் நுழைந்து கொண்டது.? அது இப்போது என் சொந்த வீட்டிற்குள்ளேயே என்னை உள்ளே விடமாட்டேன் என்று மிரட்டுகிறது."

(தொடரும்)

# மகாபாரதம்




நியாயத்துடன்பொருந்தியது தருமம் என்றும், அநியாயத்துடன் கூடியது பாவம் என்றும் சொல்லப்படுகிறது.

யாரிடம் கோபம், செருக்கு,வஞ்சனை முதலிய கெட்ட பண்புகள் இல்லையோ அவர்கள் ஒழுக்கம் உள்ளவராய் கருதப்படுவர்.

நல்வினை, தீவினைகளின் பயனான இன்ப, துன்பங்களை அனுபவிப்பதன்மூலம் வினைகள் கெடுகின்றன என எண்ணுபவர்கள்மேலோராவர்.

தானம் செய்வதில் நாட்டமுடையவர்கள் இன்பத்தை அடைவார்கள்.

மேலான ஒழுக்கம் உடையவர் தமது குடும்பங்களின் சௌகரியங்களைக் குறைத்துக் கொண்டு சாதுக்களுக்கு உதவி செய்வர். அறவோர் ஞானமாகிய உயர்நிலையில் நின்று புத்தி மயங்கிக் கிடக்கும் மக்களை நல்வழிப்படுத்த நினைப்பர்" என்று கௌசிகனுக்கு மேலோரின் பண்புகள் பற்றிக் கூறினார் தருமவியாதர்.

நான் செய்யும்தொழில் பாராட்டத்தக்கதல்ல. உண்மையில் இதில் எனக்கு மகிழ்ச்சி இல்லை. முற்பிறப்பில் செய்த தீவினையினால் இப்பிறப்பில் இத் தொழிலைச் செய்கிறேன்.விதி வலிமை மிக்கது. யாராலும் அதை அடக்க முடியாது.

பிறப்புக் காரணமாக இத் தொழிலை செய்து கொண்டிருக்கிறேன். அறவோரை போற்றி வணங்குகிறேன். தருமத்தில் பற்றுடையவனாக இருக்கின்றேன்.

எப்போதும்நான்செருக்குக் கொள்வதில்லை. நான் அதிகமாகப் பேசுவதுமில்லை. நான் பழிர்த் தொழிலை மேலானதாகக் கருதுகின்றேன். அதிலும் ஜீவஹிம்சை உள்ளது. கலப்பைக் கொண்டு உழுகையில் பூமியில் உள்ள உயிர்கள் நாசம் அடைகின்றன.

மனிதர்களில் சிலர் பிற உயிர்களைக் கொல்கின்றனர். நடக்கையில் பல உயிர்கள் மிதிபட்டு இறக்கின்றன. உட்கார்ந்திருப்பவர்களும், படுத்திருப்பவர்களும் தங்கள் உடல் அசைவினால் பல உயிர்களைத் தாங்கள் அறியாமலேயே கொல்கின்றனர்.

உயிர்களைக் கொல்லக்கூடாது என்பது உயரிய தருமம்தான். ஆனால் உலகம் முழுதும் பிராணிகளைக் கொன்று ஜீவிக்கும் பிராணிகள் தான் அதிகம் உள்ளன.

கொல்லாமையே உயர்ந்தது என்னும் சாதுக்கள்கூடத் தம்மை அறியாமல் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கின்றனர்.

உலகில் பலவகை மனிதர்கள் உள்ளனர். உறவினர்கள் செல்வம் உடைய உறவைப் பார்த்து மகிழ்வதில்லை.

செருக்கு மிக்கவர்கள் குருவையே அவமதிக்கின்றனர். தருமத்துடன்பலசெயல்கள்நடைபெறுகின்றன. அதே சமயம் தருமமும் அதருமமும் கலந்த நிகழ்வுகளும் நிகழ்கின்றன.

எவன் ஒருவன் தன் தொழிலை நேர்மையுடன் செய்கிறானோ அவன் சுவர்க்கம் செல்வது உறுதி" என்றார் தருமவியாதர்.

பின்னர் தருமவியாதர் முயற்சியை விட விதியைப் புகழ்ந்து பேசினார். நன்மை, தீமைகளே இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்றார்.

தருமத்தின் சூட்சுமத்தைச் சுலபமாக யாராலும் உணரமுடியாது. அது பல நேரங்களில் பல வகையாகக் காட்சியளிக்கிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை ஒன்றுதான் மனிதனுக்கு நல்ல பாது காப்பு. துன்பத்தின் மூலமே தூய்மையடைவது என்பது மனிதர் யாவருக்கும் ஏற்பட்ட பொது விதி.
~ வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை ஆட்சியில் கலியுகம் கண்டோம்

கலியுகத்துக்கு முந்தியது துவாபரயுகம். பாண்டவர்கள் ஆட்சி செய்த யுகம்.

துவாபரயுகத்தின் அந்தலையில் தருமர் சபை கூடுகிறது.

இரண்டு நபர்கள் ஒரு வழக்கை முன் வைத்து சபைக்கு வருகின்றனர்.

ஒருவரின் நிலத்தை மற்றவர் வாங்கியுள்ளார். நிலத்தை வாங்கியவர் அதனை உழுது பண்படுத்தியபோது, தங்கப் புதையல் ஒன்று கிடைத்தது.

கிடைத்த தங்கப் புதையலை காணியை விற்றவரிடம் கொடுக்கச் சென்றேன்.

அவர் தனக்கு வேண்டாம் என்று கூறி விட்டார்.

காணியை மட்டுமே நான் அவரிடம் வாங்கினேன். அந்த நிலத்தில் புதையுண்டு கிடந்த தங்கப் பேழையை நான் வாங்கவில்லை.

எனவே காணியை எனக்குத் தந்தவருக்கே அந்தத் தங்கப் புதையல் சொந்தமானது என்றார்.

இதனைக் கேட்ட நிலத்தை விற்றவர்; தருமபிரானே! நான் குறித்த நிலத்தை விற்ற போதே அதனுடன் சேர்த்து அனைத்தையும் விற்றுவிட்டேன்.

ஆகவே நிலத்தில் கிடந்த தங்கப் புதையல் காணி வாங்கியவருக்கே உரித்துடையது என்று வாதிட்டார்.

இருவரும் முன்வைத்த வாதத்தைச் செவிமடுத்த தருமபிரான் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

அன்பர்களே! நாளைய தினம் இச்சபைக்கு வாருங்கள். உங்கள் வழக்கைத் தீர்த்து வைக்கின்றேன் என்றார் தருமர்.

மறுநாள் தருமர் சபை கூடுகிறது. இருவரும் சபையில் பிரசன்னமாகி இருந்தனர்.

அச்சமயம் நிலத்தை விற்றவர் எழுந்து தருமபிரானே! தங்கப் பேழை எனக்கே சொந்தம் என்றார்.

காணி வாங்கியவரோ சுவாமி! காணியை வாங்கியவனுக்கே புதையல் சேர வேண்டும் என்றார். இதனைக் கேட்ட தருமர் திகைத்துப் போனார்.

நேற்றைய தினம் நீதியோடும் தர்மத்தோடும் செயற்பட்டவர்களுக்கு இன்று என்ன நடந்தாயிற்று என்று குழம்பிய தருமர், சகாதேவனைப் பார்க்கின்றார்.

காலக்கணிப்பில் ஈடுபட்டிருந்த சகாதேவன் அண்ணா! கலியுகம் பிறந்துவிட்டது. இனி நாம் இங்கிருக்க முடியாது எனக்கூற, துவாபரயுகத்து பாண்டவர்கள் மறுஉலகம் நோக் கிப் பயணிக்கின்றனர்.

இக்கதையிலிருந்து கலியுகம் எப்படியானதென்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

கலியுகத்தில் நீதி மறைந்து நிற்கும். தர்மம் சிதைந்திருக்கும். அக்கிரமக்காரர்கள் ஆட்சியில் இருப்பர்.

கொலை, கொள்ளை, ஆட்கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு ஆட்சித் தரப்பு ஆசனம் வழங்கும்.

குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கொடுக்கும். நிரபராதிகள் சிறைவாசம் அனுபவிப்பர்.

பொதுமக்கள் துன்பப்படுவர். நீதியாகவும் நேர்மையாகவும் நடப்பவர்கள் கஷ்டப்படுவர்.

அந்தக் கலியுகம் இப்போது இலங்கை யில் நடந்து கொண்டிருக்கிறது.

எனினும் துவாபரயுகத்து அவதாரம் தந்தருளிய கீதோபதேசம் கலியுகத்துக்கானது. அது நடந்தே தீரும்.

அப்போது தர்மம் நிலைக்கும். அதர்மம் அழியும். நீதியும் நேர்மையும் உடையவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் இருக்கும். இது சத்தியம்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு கடலில் வீசப்படுகிறார்களா?

## யாழில் கரையொதுங்கும் சடலம் தொடர்பில் சிறீதரன் எம்.பி சபையில் கேள்வி

(யாழ்ப்பாணம்)

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு கடலில் வீசப்படுகிறார்களா? அந்த சடலங்களே யாழ்ப்பாண கரைகளில் ஒதுங்குகின்றதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாண குடாநாட்டு கரையோரங்களில் 6 சடலங்கள் கரையொதுங்கின. இதில் நெடுந்தீவில் கரையொதுங்கிய சடலம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் உள்ளது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் மீட்கப்பட்ட 3 சடலங்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. கட்டைக்காட்டில் மீட்கப்பட்ட சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணிபொலிஸ் பகுதியில் மீட்கப்பட்ட சடலம் எங்கே? அதனை பொலிஸார் சென்று பார்த்துள்ளனர். அந்த சடலத்திற்கு என்ன நடந்தது? கரையொதுங்கிய சடலங்களும் காணாமல் போவது மிக ஆபத்தானது.

பாகிஸ்தானில் கொல்லப்பட்ட பிரியந்தகுமாரவிற்கு எமது அஞ்சலிகளை செலுத்திக் கொள்கிறோம். இதேபோன்ற காட்சிகள் இலங்கையிலும் நடந்துள்ளன. தளபதி ரமேஷ், இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றவர்களும் இப்படித்தான் கொல்லப்பட்ட படங்கள் வெளியாகியுள்ளன. கர்மவினையே திரும்பி வரும் என சொல்வார்கள்.

பாகிஸ்தானில் நடந்த சம்பவத்திற்கு பிரதமர் இம்ரான் கான் உடனடியாக மன்னிப்பு கோரினார். இலங்கையில் அப்படியான சிங்கள தலைவர்கள் யாருமில்லை என தெரிவித்தார். (ம-3)

## பருத்தித்துறையிலுள்ள காணி பதிவு அலுவலகத்தில் இருவருக்கு கொரோனா

(கரணவாய்)

பருத்தித்துறையிலுள்ள காணி பதிவு அலுவலகத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை காணி பதிவு அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஒருவருக்கு அறிகுறி தென்பட்டதையடுத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதே அலுவலகத்தில் நேற்று மேலும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த அலுவலகத்தில் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தி வைக்கப்படவுள்ளதோடு தொற்று நீக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-3,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 12 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** சாவகச்சேரிஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற வளாகம், அரசடி, சாவகச்சேரி, அரசடி மருதடி, ஆசிரியர் வீதிச் சந்தி, சாவகச்சேரி பிரதேச செயலகம், டச்சு வீதி, கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல், சங்கத்தானை, நுணாவில், அச்சுவேலி நகரம், டச்சு வீதி, அச்சுவேலி, இடைக்காடு, கதிரிப்பாய், மருதடிச் சந்தி, செல்வநாயகபுரம் வயாவிளான், பலாலி தெற்கு, தம்பாலை, தோப்பு, வளலாய் விமான நிலையச் சந்தி, விஜிதா மில், அவுனோர் (பிறைவேற்) லிமிட்டெட், தம்றோ, ஐ.பி.சி. தமிழ், நொதேர்ண் மருத்துவமனை, சூரிய உதயம் (வீனஸ் வைத்திய சாலை), பி.சி.சி.ஏ.எஸ். கல்லூரி, அம்மன் வீதி கந்தர்மடம், ஆரிய குளம்- பருத்தித்துறை வீதி, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, பீஸா கட் மற்றும் ஐ.பி.சி. தமிழ், ஆனைப்பந்தி, சிவராஜா அவெனியூ பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி, யாழ். மருத்துவமனை- பலாலி வீதி, வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிலையம், திண்ணை விடுதி, கொமர்ஷல் வங்கி- பலாலி வீதி, பனிக்கர் லேன் சந்தி, தலங்காவில் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி- சந்தை ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** இராணுவ ஆதார வைத்தியசாலை, கிளிநொச்சிவைத்திய சாலை, கிளிநொச்சி இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், நெற்களஞ்சிய சாலை, விக்கிரமரட்ண (பிறைவேற்) லிமிட்டெ, ஆனந்தபுரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, பாரதிபுரம், இலங்கை மின்சாரசபை உபமின் நிலையம், கனகாம்பிகைக்குளம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், புதுக்குடியிருப்பு 682 படைப்பிரிவு இராணுவப் படைமுகாம், ஹைட்ராமணி, இரணைப்பாலை, கைவேலி (மருத்துவமனை), கோம்பாவில் புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மருத்துவமனை, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம், திம்பிலி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உள்ளத்தை ஒழுங்குபடுத்து

❖ உங்களுக்கு வருகிற துன்பம் எதுவென்றாலும் அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

❖ உலகத்தில் உள்ள தீமைகளைப் பற்றி வருந்த வேண்டாம். உங்கள் உள்ளத்தில் இருக்கும் தீமையைப் போக்க வழிகாணுங்கள்.

❖ உள்ளத்தை ஒழுங்குபடுத்தினால், எல்லா இடத்திலும் கடவுளைக் காண்பீர்கள்.

❖ பாவ எண்ணமும், பாவச் செயலும் ஒன்று தான். அதனால், தீய எண்ணமும் கூட ஒருவனுக்கு கேடு விளைவிக்கும் என்பதை மறவாதீர்கள்.

❖ சுதந்திரம் இல்லாத வரையில் ஒரு மனிதனிடம் அன்பு தோன்றுவதில்லை. அடிமையாகி விட்டால் உண்மையான அன்புக்கு இடமே இல்லை.

❖ உயிர் போகும் வேளையில் கூட, ஒருவருக்கு உதவி செய்வது தான் தர்மயோகம்.

❖ தன்னை அடக்கக் கற்றுக் கொண்டவன் தரணியையே அடக்கும் வலிமை பெறுகிறான்.

❖ நேர்மை, அக்கறை உணர்வுடன் ஈடுபடும் எந்த விஷயத்திலும் சாதனை நிகழ்த்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

30

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்






**ஆர்யபட்டர் (Aryabhata) எண் முறைமை**

ஆரியபட்டர் பற்றி....

ஆரியபட்டர் (Aryabhata), (கி.பி.476~550) என்பவர் இந்திய கணிதவியலின் செந்நெறிக் காலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கணிதவியலாளரும், இந்திய வானியலாளர்களுள் முதன்மையான வரும் ஆவார். ஆரியபட்டாவின் பிறப்பிடத்தைச் சரியாகத் தீர்மானிக்கத்தக்க வகையில் சான்றுகள் எதுவும் அகப்படவில்லை.

எனினும் இவர் குசுமபுர என்னும் இடத்துக்குச் சென்று அங்கே உயர்கல்வி கற்றதாகவும் அங்கே வாழ்ந்ததாகவும் அறியப்படுகிறது. இவருடைய நூலுக்கு உரையெழுதிய பாஸ்கரர், இவ்விடம், இன்றைய பாட்னாவான பாடலிபுத்திரமே என்கிறார். ஆரியபட்டா எழுதிய நூல்களுள், ஆரியபட்டீயம் (Aryabhatiya), ஆரியபட்ட சித்தாந்தம் என்பவை முக்கியமானவை.

இயற்கணிதத்தைச் சார்ந்து முதன் முதலில் உலகில் எழுதப்பட்ட நூல் இந்தியாவில் ஆரியபட்டாவால் 5 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது பீஜகணிதம் என்று பெயர் கொண்டது. பாடல் வடிவில் அமைந்துள்ள ஆரியபட்டீயம், கணிதவியல், வானியல் என்பன தொடர்பான கண்டுபிடிப்புக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

தொடர்ந்த பல நூற்றாண்டுகளிலும் இந்தியக் கணிதவியலில் இந்நூல் செல்வாக்குச் செலுத்தியது. மிகச் சுருக்க வடிவில் இருந்த இந்நூலுக்கு, விரிவான உரைகளை இவரது மாணவரான முதலாம் பாஸ்கரரும், 15 ஆம் நூற்றாண்டில், ஆரியபட்டீய பாஷ்யம் என்ற பெயரில் நீலகண்ட சோமயாஜி என்பவரும் உரை எழுதியுள்ளனர்.

ஆர்யபட்டாவின் படைப்பைப் பற்றி நேரடி விபரங்களை ஆர்யபட்டீயத்தில் இருந்து தான் அறிந்து கொள்ள முடியும். ஆர்யபட்டீயம் என்ற பெயர் ஆர்யபட்டா அவரால் சூட்டி இருக்க வாய்ப்பில்லை. அவரின் படைப்புக்கு விளக்க உரை எழுதியவர்களால் தான் சூட்டியிருக்க வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.

ஆரியபட்டீயம் நூல் முழுவதும் செய்யுள் வடிவில் சூத்திரங்களாக எழுதப்பட்டதாகும். 13 அறிமுகச் செய்யுள்கள், 108 அடிப்படைச் செய்யுள்களுடன் மொத்தம் 121 செய்யுள்களைக் கொண்டுள்ள ஆரியபட்டீயம், 4 பிரிவுகளாகப் (பதம் அல்லது அத்தியாயம்) பகுக்கப்பட்டுள்ளது. இதை எழுதும்போது ஆரியபட்டருக்கு வயது 23 மட்டுமே.

அதன் முதல் பிரிவான கிடிபாதம் (13 செய்யுள்கள்), காலத்தின் மிகப் பெரும் அலகுகள் குறித்து விளக்குகிறது. கல்பம், மன்வந்திரம், யுகம் ஆகியவற்றின் காலக் கணக்கீடுகளை இதில் ஆரியபட்டர் விளக்கியுள்ளார். இந்தப் பிரபஞ்சம் தோன்றிய மகா யுகத்தின் துவக்கம் 43.2 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் என்பது பட்டரின் முடிவு. நவீன விஞ்ஞானமும் இந்தக் கணக்குடன் ஒத்துப் போகிறது. திரிகோணவியலின் அடிப்படையான சைன் அட்டவணையையும் கிடிபாதத்தில் ஆரியபட்டர் அளித்துள்ளார்.

நூலின் இரண்டாவது பிரிவான கணிதபாதம் (33 செய்யுள்கள்), எண்ணியல் (Arithmetic), வடிவியல், வானியலில் பயன்படும் கருவிகள், இருபடிச் சமன்பாடுகள் (Quadratic Equations), தேரவியலாச் சமன்பாடுகள் (Unterminated Equations), அடுக்குத் தொடர்கள் (Power Series) குறித்து விளக்குகிறது. மூன்றாவது பிரிவான காலக்கியபாதம் (25 செய்யுள்கள்), காலப் பகுப்பையும், நேரத்தின் சிறு அலகுகளையும் விளக்குகிறது. நாள், வாரம், மாதம் குறித்த விபரங்களும், கிழமைகளின் பெயர்களும் இப்பிரிவில் கூறப்படுகின்றன.

நான்காவது பிரிவான கோளபாதம் (50 செய்யுள்கள்), கோளங்களின் நிலை, பூமியின் வடிவம், அதன் இயக்கம், பகல்-இரவு தோன்றுவதன் காரணம், கிரகணங்கள் தோன்றுவதன் காரணம், இராசி மண்டலம் ஆகியவற்றை விபரிக்கிறது. ஆரியபட்டரின் பெருமைகளை வெளிநாட்டினர் உணர்ந்து மலைக்கின்றனர்.

அவர் கண்டறிந்த ஒவ்வொன்றும் கணிதம், வானியல் துறைகளில் முன்னோடியானவை. அவை அரபியில் மொழி பெயர்க்கப்பட்டு, பின்னாளில் லத்தீனிலும் கிரேக்கத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, உலகம் முழுவதும் பரவின. அவையே நவீன கணிதத்துக்கும் வானியலுக்கும் அடிப்படையாகின.

ஆரியபட்டீயத்தின் கணிதபாதமே பின்னாளில் அட்சரகணிதமாக (Algebra) வடிவெடுத்தது. கிடிபாதமே நவீன திரிகோணவியலுக்கான (Trigonometry) ஆதாரமாகும். காலக்கியபாதமும் கோளபாதமும் தற்கால வானியலுக்கு (Astronomy) ஆணிவேராகும்.

**ஆரியபட்டரின் சில சிறப்பான கண்டுபிடிப்புகள்**

பூமி கோள வடிவமானது. பூமியின் விட்டம் 1,050 யோஜனை (ஒரு யோஜனை = 13.6 கி.மீ.). பூமியின் சுற்றளவு 44,860 கி.மீ.பூமி தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது. அவ்வாறு ஒரு முறை பூமி சுற்ற 23 மணி, 56 நிமிடம், 4.1 விநாடி ஆகிறது (இதனை அவர் நாழிகையில் குறிப்பிடுகிறார்). பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால்தான் இரவும் பகலும் ஏற்படுகின்றன.

வானிலுள்ள கோள்கள் அனைத்தும் கோள வடிவினவை. சூரியன், சந்திரனும் கோள வடிவினவை. சூரியனின் ஒளியையே சந்திரனும் கோள்களும் பிரதிபலிக்கின்றன.

புதன், வெள்ளி, செவ்வாய், பூமி, சந்திரன், சூரியன், வியாழன், சனி என்ற வரிசையில் வானில் நீள்வட்டப் பாதையில் கோள்கள் சுற்றுகின்றன. (இதில் அவர் சூரியனையும் ஒரு கோளாகக் கொண்டிருப்பது மட்டுமே தவறு). ஆனால் கிரேக்க அறிஞர்கள் பூமி தட்டையானது என்று சொல்லி வந்தபோது அதன் உண்மையான வடிவத்தையும், சூரிய குடும்பத்தில் கோள்களின் வரிசையையும் துல்லியமாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது).

வான மண்டலத்தில் பூமி ஒரு சுற்று சுற்றிவர ஆகும் காலமே ஆண்டு. அது 365.8586805 நாட்கள். அதாவது, 365 நாட்கள், 6 மணி, 12 நிமிடம், 30 விநாடிகள். (நவீன கணக்கீட்டில் இதன் பிழை 3 நிமிடம், 20 விநாடிகள் மட்டுமே)

வட்டத்தின் சுற்றளவையும் பரப்பளவையும் கண்டறியப் பயன்படும் 'பை' (Pie) என்ற மாறிலியின் (22/7=3.1416) மதிப்பை முதன் முதலில் கண்டறிந்தவர் ஆரியபட்டரே. அதற்கான சூத்திரத்தையும் அவர் அளித்திருக்கிறார்.

சந்திர கிரகணம் பூமியின் நிழலாலும் சூரிய கிரகணம் இடையே புகும் சந்திரனாலும் ஏற்படுகின்றன என்பதை தெளிவாக விளக்கினார். (ராகு} கேது பாம்புகள் சந்திரனை விழுங்குகின்றன என்ற பாமர நம்பிக்கையை முதலில் மறுத்தவர் ஆரியபட்டரே).

வட்டத்தின் சுற்றளவை அறிய அதன் விட்டத்தை மாறிலியால் (22/7) பெருக்க வேண்டும். முக்கோணத்தின் பரப்பளவை அறிய அதன் அடிப்பக்க நீளத்தை, செங்குத்து உயரத்தால் பெருக்கி, இரண்டால் வகுக்க வேண்டும் என்று வாய்ப்பாட்டை உருவாக்கியவர். கோளத்தின் கன அளவை அறியும் சூத்திரத்தையும் அவர் அளித்துள்ளார்.

சைன் அட்டவணையை முதலில் உருவாக்கியவர் பட்டரே. அவர், ஜ்ய (சைன்), கோஜ்ய (கோசைன்), விளக்கியுள்ளார். இதுவே நவீன திரிகோணவியலின் அடிப்படை.

**வர்க்கத் தொடர்கள்**

கனத் தொடர்களின் கூட்டுத் தொகையை அறிவதற்கான முறையையும் பட்டர் விளக்கியுள்ளார். மூன்று எண்களிலிருந்து (A, B, C) அறிய வராத நான்காவது குறியீட்டு எண்ணின் (x) மதிப்பைக் கணக்கிடும் மூன்று எண் விதியையும் அவர் உருவாக்கினார். இவை பின்னாளில் இயற்கணிதம் எனப்படும் அட்சரகணிதமாக (Algebra) வளர்ந்தன.

வலமிருந்து கடைசி எண் ஒன்று, இரண்டாவது பத்து, மூன்றாவது நூறு, நான்காவது ஆயிரம் என்று வரும் எண்களின் இடமதிப்பு குறியீட்டு முறையை (Place Value System) அவர் விளக்கியுள்ளார்.

**பூச்சியம்**

பற்றிக் குறிப்பிடாவிட்டாலும் அதன் பயன்பாட்டை ஆரிய பட்டீயத்தில் பல இடங்களில் அவர் வெளிப்படுத்துகிறார். பிரெஞ்ச் கணித மேதையான ஜார்ஜ் இர்ஃபா, "இடமதிப்பு குறியீட்டு முறையையும், திரிகோண விதிகளையும் காணும்போது அவர் பூச்சியத்தைப் பயன்படுத்தியிருப்பது உறுதியாகிறது" என்கிறார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

விக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,573 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## சுற்றியுள்ள...

யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் எண்ணக்கருவில் யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாகிய மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை புனரமைத்து மற்றும் அழகுபடுத்தும் நோக்குடன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் அடிக்கல் நாட்டிப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதேவேளை, குறித்த திட்டத்தின் மாதிரிப் படமும் யாழ்.மாநகர முதல்வரால் வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33)

## நல்லூரடியிலும்...

அணைத்துவிட்டு வெளியே வந்தார்.

இதன்போது சமையலறையில் பாரிய சத்தம் ஒன்று கேட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறி காணப்பட்டது. இருப்பினும் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. (ம-3,104)

## ரயில் மோதியதில்...

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த ரயில் வவுனியா - ஈரப்பெரியகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தவேளை குறித்த நபர் மீது மோதியதில் குறித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வவுனியா - தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த கந்தையா ரவி (வயது - 55) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104,250,299)

## வடக்கில் திங்கள்...

முன்னிலை ஊழியர்கள்) மேலதிகமாக மூன்றாவது பைசர் பூஸ்டர் கோவிட் தடுப்பூசியானது நாளை மறுதினம் முதல் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கப்பட உள்ளது.

மேற்குறிப்பிட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் இத்தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இரண்டு தடவைகள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் கோவிட்-19 தொற்றிற்கு உள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாத கால இடைவெளியின் பின்னர் இத்தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம். (ம-3,18,33,104)

## ராஜபக்ஷ அரசின்...

கடந்த நவம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகிய பாதீட்டின் மூன்றாம் வாசிப்பு அல்லது குழுநிலை விவாதம் நேற்றுடன் நிறைவடைந்தது.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, ஈபிடிபி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் அரசின் பங்காளிக் கட்சிகள் வாக்களித்திருந்தன.

ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பன எதிராக வாக்களித்தன. (ம-3)

## அவசர சிகிச்சை...

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தை கையில் எடுத்ததில் இருந்து நாட்டின் சகல துறைகளும் வீழ்ச்சி கண்டுள்ளது. பொருளாதாரம் சரிந்துவிட்டது.

மக்களை வரிசையில் நிற்கவைத்துவிட்டீர்கள். நாடே நிதி நெருக்கடிக்குள் வீழ்ச்சி கண்டுவிட்டது. வரவு - செலவு திட்டத்தைகூட கடன்களில் கையாள வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் நாடு கடன்களில் சிக்க ஆரம்பித்தது.

அப்போதைய நிதி அமைச்சர் இன்று பிரதமர், அப்போதைய மத்திய வங்கி ஆளுநரே இன்றும் ஆளுநராக உள்ளார். இவர்களினால் மீண்டும் அதே பயணத்தை மட்டுமே முன்னெடுக்க முடியும்.

உலகில் உள்ள நாடுகளில் தமது வெளிநாட்டு கையிருப்பை ஒரு பில்லியனுக்கும் குறைவாக கொண்டுள்ள நாடொன்று இருக்கும் என்றால் அது இலங்கை என பதிவு செய்துகொள்ள வேண்டும். அந்தளவு மோசமான நிலைக்கு நாடு சென்றுள்ளது. இந்த நிலையில் எந்த நாடும் எமக்கு கடன் கொடுக்காது. அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார். (ம-3)

## ஆனைக்கோட்டை...

(வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் நண்பகல் கோவிலில் பூஜை வழிபாடுகளை குறித்த பூசகர் முடித்துவிட்டு மோ.சைக்கிளில் வீடு நோக்கி பயணித்தவேளை மூத்தவிநாயகர் கோவிலடியில் வைத்து எதிர்த்திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

உடனடியாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-3)

## கடன் இல்லாத...

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சிமறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பாக வெளிப்படையாகவே வரவு - செலவு திட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கின்றேன். தற்போது நாட்டின் பொருளாதாரம் பாரிய பிரச்சினையில் இருக்கின்றது. என்றாலும் பொருளாதாரத்தைகட்டியெழுப்ப நாங்கள் தேவையான திட்டங்களை மேற் கொண்டு வருகின்றோம் என்றார். (ம-3)

## பண்டி...

தெரிவித்துள்ளார்.

இல்லையேல் பண்டிகை கொத்தணி என்ற மற்றுமொரு கோவிட் கொத்தணி உருவாகக்கூடும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், இது போன்ற ஒரு நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு பொது மக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

அத்துடன், பண்டிகை காலங்களில் மக்கள் கட்டுப்பாடின்றி செயற்பட்டால் அதன் விளைவுகள் விபரீதமாக அமையலாம் எனவும், தற்போதுள்ள சாதாரண வாழ்க்கை நிலை பாதிக்கப்படலாம் எனவும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## ஒமிக்ரோன்...

சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எனவே ஒமிக்ரோன் மாத்திரமல்ல, எந்தவொரு பிறழ்வானாலும் அது பாரியளவில் பரவுவதற்கு இடமளிக்காமல் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

12 - 15 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி வழங்கலுக்கும் 16 - 19 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கலுக்கும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இவர்களுக்கும் பைசர் தடுப்பூசியே வழங்கப்படும். ஆனால் அந்த வேலைத் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படமாட்டாது. கல்வி அமைச்சுடன் இணைந்து திட்டமிடப்பட்ட பின்னரே அதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

அதேபோன்று தொழிற்சாலைகள் உள்ளிட்டவற்றில் 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் மூன்றாம் கட்ட தடுப்பூசியை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்கு மத்தியில் சுற்றுலாத்துறையில் தற்போது நடைமுறையிலுள்ள சில கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பிலான புதிய சுற்றுநிரூபம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விரைவில் வெளியிடப்படும் என்றும் கூறினார். (ம-3)

### மெகா பவர்

திகதி 10/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0960
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
K 12 31 32 52 57

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/12/10 — 1644 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 36 45 50 51
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2021/12/10
சீட்டிழுப்பு இலக்கம் 4612
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 4 2 1 4 3 9
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 10.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2907
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
I 18 31 53 63
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.12.10
சீட்டிழுப்பு இலக்கம் - 642
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
W 03 39 52 55
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7600 / 011 232 4334 உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### அத கோடிபதி ADA KOTIPATHI

கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1415
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 10.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,648,700
வெற்றி இலக்கங்கள் 03 08 34 43 — ஆங்கில எழுத்து G
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3750
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,000,500.00
வெற்றி இலக்கங்கள் 02 26 49 65 — ஆங்கில எழுத்து U
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1589 — நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 10.12.2021 — தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Y 52 54 68 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 74,112,960/=
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி 0112 333 546-47

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,794,508/=
திகதி 10.12.2021
வெற்றி வாரம் 3301
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 15 22 25 மகரம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,226,580/=

### ஜய

சீட்டிழுப்பு வாரம் 776
திகதி 10.12 2021 வெள்ளிக்கிழமை
Q 10 38 42 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,991,255
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். சுன்னாகம் நகரத்தின் மத்தியில் K.K.S வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் (இலங்கை வங்கி முன் வீதியில்) 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(1 1/2 பரப்பாக பிரித்து வழங்கப்படும்.)

(8997)

தொடர்புகளுக்கு
**076 890 9259**
**077 015 0353**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(Lanka Farm அருகாமையில்)
1 பரப்பின் விலை 12 இலட்சம்

(8997)

**077 658 5999**
**077 623 4204**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(8997)

தொடர்பு:
**077 911 6983**
**077 288 0152**

## Physics

T.K.Kajan B.sc (8929)
☎-077 653 1177

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் தங்க நகை அடகு சேவை நிலையத்திற்கு காசாளர் தேவை. (பெண்கள்)
(O/L, கணினி அறிவு)

தொடர்பு (8998)
**077 784 0379**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3215)

0768226240 DHL


# +754

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 754 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 571, 426 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 12, 615 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 377 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 544,200 ஆக அதிகரித்துள்ளது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 10.11.2021 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கிருஸ்ணபிள்ளை இராசதுரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (11.12.2021) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(9006)

இல. 86, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
077 782 4835
குடும்பத்தினர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9007)

**076 825 7716** (ஆகாஸ்)

## வேலை வாய்ப்பு

யாழ். நகரை தலைமையமாகக் கொண்டு இயங்கும் எமது நிறுவனத்தின் கிளைகளுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- Welder
- Graphic Designer (Male/ Female)
- Management Assistant (Male/ Female)
- Field Supervisors

(9015)

கிளைகள் - யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி

MAZTER Interior
expert in wall designing
Mazter Interior
இல.36, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1618/ 077 582 2448

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனகர் வளவு 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(நிலப்பரப்பு)
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9012)

தொடர்புகளுக்கு
**077 814 7389, 070 705 1655**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியவிளான் கிரேசர் வீதியில் 6 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
1 3/4 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
விளான் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்.
பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(9011)

**077 614 7333 | 070 705 1655**

# பொருளியல்

## கருத்தரங்கு A/L 2021

## S.Jeyakumar

(B.A(Hons) Econ Spl, M.A.in.Econ (Pera), P.G.D.E)

- ✓ பரீட்சை எதிர்பார்ப்பு வினாவிடைகள்
- ✓ புள்ளித்திட்ட விளக்கம்
- ✓ தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்

ஆரம்பம் : 14.12.2021 செவ்வாய்க்கிழமை 2.30pm
இடம் : New Science Hall, Jaffna.

Zoom செயலி மூலமும் இடம்பெறும்

வெளி மாணவர்களும் இணைந்துகொள்ளலாம்.

(8999)

**T.P : 0777238597, 0764207927**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.